# ஹிந்தி எதிர்ப்பு பொதுக் கூட்டம்.

## தியாகராயநகரில் கூடியது.

(ஒரு நிருபர்)

சென்னை, அக். 9

7-10-37 வியாழன் அன்று மாலை 6-மணிக்கு தியாகராய நகர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் மாஜி மந்திரி தோழர் எஸ். முத்தையா முதலியார், பி. எ., பி. எல், சி ஐ ஈ. அவர்கள் தலைமையில் தியாகராய நகர் பனகால் பார்க்குக் கெதிரிலுள்ள மைதானத்தில் ஒரு மாபெருங் கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு சுமார் 500 பேருக்குமேல் குழுமியிருந்தனர்.

### தலைவர் முகவுரை

தலைவர் முகவுரையாக ஹிந்தி கட்டாயபாடமாக்குவது தமிழ் கலைக்கும் தமிழர் நாகரிகத்திற்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்பதால் அதை கட்டாயபாடமாகத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு போதிக்கப்படல் கூடாதென்றும் மற்றும் இளம் பிள்ளைகள் இப்பொழுதேயுள்ள பாடங்களை கற்க போதிய உடல் வலிமை யில்லாததால் ஏற்கனவேயுள்ள உடல் உரம் குன்றி பல இன்னலுக்குள்ளாகின்றனரென்றும் அதனால் தமிழ் மொழிக்குப் போதிய காலம் செலவழிக்காது ஆங்கில மொழியைக் கற்று தமிழைக் கைநழுவ விட நேர்ந்தது என்றும் பேசி தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி.எல். அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

### தோழர் பாரதியார் பேச்சு.

தோழர் பாரதியார் மிக்க சந்தோஷ ஆரவாரத்தினிடையே எழுந்து சுமார் $1\frac{1}{2}$ மணிக்கு மேல் இனிய சொற்பொழிவாற்றினார். அவர்களது வீர உரை மக்கள் மனதில் பசு மரத்தாணிபோல் பதியும்படியிருந்தது. அவ்வீர உரை மக்களுக்குப் புத்துணர்ச்சி யளித்தது. அவர்களது தமது உரையில் ஹிந்தி கட்டாய பாடமாக்குவது தகாதென்றும் காங்கரஸ் மந்திரிகள் பதவியேற்ற பத்து நாளைக்குள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க தீர்மானித்தது மிகவும் அவசரமும் தவறுமாகுமென்றும் கனம் முதல் மந்திரியார் கிறிஸ்தவ கல்லூரியில் பேசும்பொழுது தான் அவசரமாக ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கப் போவதில்லையென்றும் கல்வி கற்பவர்களுள் நீண்டநாள் பழக்க முள்ளபலரையும் கலந்து ஆலோசித்தே முடிவு செய்வேனென்றும்சொல்லிவிட்டுகூட்டம் ஒன்றும் தியாகராய நகரில் கூட்டினார். அக்கூட்டத்தில் அவர்கள் அபிப்பிராயம் அவருக்கு அனுகூல மில்லாததைக் கண்டு அவர்களை மேலே பேச விடாது தடுத்துத் தான் எப்படியும் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவேன் என்றார். சேலத்தில் பேசும்பொழுது முதல் மந்திரியார் யாருக்கோ வாக்குக் கொடுத்ததாகவும் அதன்படி நடக்க வேண்டும் என்றும் கூறுகிறார். பள்ளிக்கூடப் பிள்ளைகளைப்பார்த்து நான்அவர்களை அதிகார பலத்தால் அமிழ்த்துவேன் என கூறியதாக "இந்து" பத்திரிகை கூறுகிறதென்றும் அண்மையிற் பேசிய ஓரிடத்தில்

---

திரிகையை ஆதரிப்பதும் அவர்கள் போட்டிப் பரிசுகளில் பொருள் இழப்பதும் இனி தமிழர்கள் அழிவுக்கேகாரணமாகும் என்பதை இனியாவது உணருவார்களா! தமிழர்கள் "ஆனந்த விகடன்" படிப்பது தற்கொலை செய்து கொள்வதற் கொப்பாகிவிட்டது என்பது இப்போது ருஜுவாயிற்று.

---

# பாட்லிவாலா வழக்கு.

## "செஷன்ஸ்" விசாரணைக்கு உத்தரவு,

நெல்லூர், அக். 8

ராஜத் துரோக குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருக்கும் தோழர் எஸ். எஸ். பாட்லிவாலா இன்று நெல்லூர் சப் மாஜிஸ்டிரேட்டால் செஷன்சுக்கு "கமிட்" செய்யப்பட்டார்.

---

# கள்ளுக்குப் பதில் காப்பியா?

## சேலத்தில் மாதிரிக் கடைகள்.

(ஒரு நிருபர்)

சேலம், அக். 5–

சேலத்திலே கள்ளுக்கடைகள் மூடப்பட்ட பிறகு காப்பிப்பிரசாரம் நடைபெற்று வருகிறது. காப்பிகுடிக்கவேண்டிய அவசியத்தைக் குறித்து கிராமங்கள்தோரும் மோட்டார் லாரியிலே காப்பி ஆர்கனைசர்கள் சென்று பிரசாரம் செய்து வருகிறார்கள்.

டவுனிலே இரண்டு மாதிரி கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலே 6-கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லாவிலே 10 அல்லது 12 கடைகள் புதியதாக இன்னும் திறக்கப்படும் என்று உள்ளூர் ஆர்கனைசர் தெரிவிக்கிறார்.

---

தமிழர் அறிவுடையவரென்று தான் எண்ணியதாகவும் ஆனால் தமிழர்அறிவிலிகளென்றும் பகட்டமாக பேசியதாக "தின மணி" கூறுகிறது.

ஹிந்திக்கு அவசியம் என்ன?

கனம் ராஜகோபாலாச்சாரியார் எப்படி வாக்கு கொடுக்க முடிந்தது? அப்படி வாக்கு கொடுத்தது பதவி ஏற்புக்கு முன்பா அல்லது பின்பா? முன்பென்றால் ஆச்சாரியார் துறவறத்திலிருந்தாரே பின்பென்றால் ஏன் வாக்காளருக்கு அறிவிக்கவில்லை?

ஹிந்தியை கட்டாய பாடமாக்க மந்திரியாரும் அவரைச் சார்ந்தவர்களும் சொல்லிவரும் காரணங்கள் ஒன்று, இந்தியாவுக்கு பொதுமொழி வேண்டும்; பொது மொழியினால் ஒற்றுமை பெற்று விடுதலை அடைய முடியுமென்பது. இதைஎவரும்ஒப்புக்கொள்ள இயலாது. சரித்திர சான்றில்லை. பொது மொழியில்லாத நாடு சுபிக்ஷமாக வாழவில்லையா?

பின்னர் வடநாட்டினரோடு உறவாடுதல். உறவாட விரும்புவோர் தேவையானால் யாரும் கட்டாயப்படுத்தாமலே ஹிந்தி கற்றுக்கொள்ளுகின்றனர். சமஷ்டிக்கு யாரோ சிலர் போகப் போவதற்கு அனைவரும் என் ஹிந்தி கற்கவேண்டும்?

முடிவில் பாரதியார் தமிழ் மக்கள் இன்றே எழுந்து ஆவன செய்தல்வேண்டுமென்றும் இதற்காக பல மொழியாளருமடங்கிய தூதுகோஷ்டி கவர்னரிடம் சென்று பார்க்க வேண்டுமென்றும் இதற்காக வேண்டியவைகளைமுடியுங்களென்றும் சொல்லிபின் வரும் தீர்மானத்தை பிரேரேபித்தார். அது ஏகமனதாக நிறைவேறியது.

### தீர்மானம்.

தியாகராயநகரத்தவர்கள் அடங்கிய இக்கூட்டம் ஏகமனதாக சென்னை அரசாங்கத்தார் 1, 2, 3, ஆம் பாரங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடம் ஆக்கும் முயற்சி, தமிழ் நாகரிகம், தமிழ் கலை, தமிழ் மொழி வளர்ச்சி இவைகளைத் தடை செய்து அவற்றினை அழிக்கச் செய்யும் முயற்சியேயாகும் என்று கருதுகின்றமையால் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் முயற்சியை வன்மையொடு கண்டிக்கிறது. தமிழைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றது.